வரிகள் – வரித்தள்ளுபடி குழு – **1956** ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம் – **1.4.2002** முதல் **5.9.2006** வரையிலான காலத்தில் மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களுக்கு (watery coconut) செலுத்த வேண்டிய மத்திய விற்பனை வரி நிலுவைத் தொகை மற்றும் அதற்கான தண்டத் தொகை மொத்தம் ரூ.**90,60,30,552**/–ஐ தள்ளுபடி செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை

அரசாணை (நிலை) எண்.05 நாள் 11–01–2010
மார்கழி 27, திருவள்ளுவர் ஆண்டு 2040

படிக்கவும்

1. முதன்மைச் செயலர் (ம) வணிகவரி ஆணையர், கடித எண் வரைவுக் குழு 2/50620/2008, நாள் 15–12–2008.
2. முதன்மைச் செயலர் (ம) வணிகவரி ஆணையர், கடித எண் வரைவுக் குழு 2/63/2007, நாள் 26–2–2009, 6–11–2009 மற்றும் 18–12–2009.

**-oOo-**

**ஆணை**

முதன்மைச் செயலர் மற்றும் வணிகவரி ஆணையர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அவரது கடிதத்தில், **1959** ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் இடம் பெறாத தேங்காய் மற்றும் கொப்பரைத் தேங்காய் ஆகியவைக்கு **1.4.1994** முதல் வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதாகவும், இது மேற்படி சட்டத்தின் மூன்றாவது அட்டவணை பகுதி–Bல் வரிசை எண் **10**ன் கீழ் **1.4.1994** முதற்கொண்டும், பின்னர் இதே அட்டவணையில் வரிசை எண் **17** ஆக **1.4.2002** முதற்கொண்டும் மாற்றம் செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், வணிகவரி ஆணையரின் **12–3–1999** நாளிட்ட சுற்றறிக்கையில், **1959** ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்னை வரிச் சட்டம், பகுதி B, வரிசை எண் **10**ல் உள்ள பொருட்கள், மாநிலங்களுக்கிடையேயான விற்பனை செய்யப்படும் நேர்வுகளில், மத்திய விற்பனை வரி செலுத்துவதிலிருந்து தொடர்ந்து விலக்கு பெற்றுள்ளது என்று தெளிவுரை வழங்கப்பட்தாகவும் தெரிவித்துள்ளார்.

**2.** வணிகவரி ஆணையரின் சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட தெளிவுரையின்படி மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்யப்படும் தேங்காய், மத்திய விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்கு பெற தகுதி பெறுகிறது என்றும், இதற்கு 'சி' படிவம் தேவையில்லை என்று வழக்கு எண்.**976/2001**ல் மதுரை விற்பனை வரி மேல் முறையீட்டு தீர்ப்பாயம் அதன் **14.3.2002** நாளிட்ட தீர்ப்பாணையில் தீர்ப்பு வழங்கியது என்றும், இதன்படி, தமிழ்நாட்டிலுள்ள தேங்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள், மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களுக்கு வரி வசூலிப்பதை நிறுத்திவிட்டதாகவும், பல்வேறு வரி மதிப்பீட்டு அலுவலகங்களில் நடத்தப்பட்ட தணிக்கைகளில், மாநில கணக்குத் தலைவர் அலுவலகத்தின் தணிக்கை குழுவானது, 'சி'

படிவம் இல்லாமல் மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது முறையல்ல என்று தெரிவித்து, அந்த நேர்வுகளுக்கு 8% வரி விதிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்தது என்றும் முதன்மைச் செயலர் மற்றும் வணிகவரி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. தணிக்கைத் துறையினரின் பரிந்துரையின்படி, வரி மதிப்பீடுகள் திருத்தப்பட்டு, வரி செலுத்தும்படி கோரப்பட்டதாகவும், இதனை எதிர்த்து தேங்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது என்று தெரிவித்துள்ளார். இதற்கிடையே, 6–9–2006 நாளிட்ட வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் அரசாணை (நிலை) எண் 100ல், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திற்கு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, இரண்டாவது அட்டவணையில் உள்ள கொப்பரைத் தேங்காய் தொடர்ந்து வரி விதிப்பிற்கு உட்படும் என்றும், மூன்றாவது அட்டவணையில் பகுதி B, வரிசை எண் 17ல் ஏற்கனவே உள்ள இனங்களை நீக்கம் செய்து, அதற்கு பதிலாக 'தேங்காய்' என்பதற்கு மட்டும் விற்பனைவரி விலக்களித்தும் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன என்றும் முதன்மைச் செயலர் மற்றும் வணிகவரி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. தேங்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தால் தொடரப்பட்ட வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் அதன் 15.11.2006 ஆம் நாளிட்ட தீர்ப்பாணையில், மாநில விற்பனை வரிச் சட்டத்தில் தேங்காய் விற்பனைக்கு பொதுவான வரி விலக்கு (General Exemption) அளிக்கப்படாததால், மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்யப்படும் தேங்காய்கள் (Watery Coconuts) மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரிவிதிப்புக்கு உட்படும் என்று தீர்ப்பு வழங்கியதாகவும், இந்தத் தீர்ப்பை எதிர்த்து வணிகர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீட்டு மனு ஒன்று தொடுக்கப்பட்டு (W.A.No.989/2008) வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் முதன்மைச் செயலர் மற்றும் வணிகவரி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு தேங்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தால், வணிகவரி ஆணையரின் 12.3.1999 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட தெளிவுரையின் அடிப்படையிலேயே வரி வசூலிக்கப்படவில்லை என்றும், 1.4.2002 முதல் 5.9.2006 வரையிலான காலத்திற்கான வரியினை தள்ளுடி செய்யுமாறும் முறையிடப்பட்டது.

6. 17.11.2008 அன்று நடைபெற்ற "தள்ளுபடி ஆய்வுக்குழு" (Waiver Committee) கூட்டத்தில், தேங்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தின் கோரிக்கையினை ஏற்று வரி தள்ளுபடி செய்யலாம் என்று பரிந்துரைக்கப்பட்டது.

7. 1.4.2002 முதல் 5.9.2006 வரையிலான காலத்தில் பின்வரும் மண்டலங்களில் குறிப்பிட்டுள்ளவாறு மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களுக்கு (Watery Coconuts) செலுத்தப்பட வேண்டிய மத்திய விற்பனை வரித் தொகை மற்றும் அதற்கான தண்டத் தொகை மொத்தம் ரூ.90,60,30,552/–ஐ (ரூபாய் தொண்ணூறு கோடியே அறுபது இலட்சத்து முப்பதாயிரத்து ஐநூற்று ஐம்பத்து இரண்டு மட்டும்) தள்ளுபடி செய்து ஆணை வெளியிடுமாறு முதன்மைச் செயலர் மற்றும் வணிகவரி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ. எண். | மண்டலம் | வணிகர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.) | | |
|---|---|---|---|---|---|
| | | | வரி | தண்டத் தொகை | மொத்தம் |
| 1. | சேலம் | 520 | 26,58,81,278 | இலலை | 26,58,81,278 |
| 2. | வேலூர் | 258 | 19,46,31,625 | 6,09,11,460 | 25,55,43,085 |
| 3. | திருச்சிராப்பள்ளி | 60 | 9,85,86,154 | 99,05,203 | 10,84,91,357 |
| 4. | மதுரை | 52 | 12,29,54,402 | 3,93,81,406 | 16,23,35,808 |
| 5. | திருநெல்வேலி | 17 | 53,53,427 | 10,84,653 | 64,38,080 |
| 6. | கோயமுத்தூர் | 35 | 4,90,48,468 | 5,82,92,476 | 10,73,40,944 |
| | மொத்தம் | 942 | 73,64,55,354 | 16,95,75,198 | 90,60,30,552 |

8, முதன்மைச் செயலர் மற்றும் வணிகவரி ஆணையரின் கோரிக்கை அரசால் கவனமுடன் பரிலீலிக்கப்பட்டது. அதன்படி, 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், 1–4–2002 முதல் 5–9–2006 வரையிலான காலத்தில் மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்யப்ட்ட தேங்காய்களுக்கு (Watery Coconuts) செலுத்தப்பட வேண்டிய மத்திய விற்பனை வரித் தொகை மற்றும் அதற்கான தண்டத் தொகை மொத்தம் ரூ.90,60,30,552/–ஐ (ரூபாய் தொண்ணூறு கோடியே அறுபது இலட்சத்து முப்பதாயிரத்து ஐநூற்று ஐம்பத்து இரண்டு மட்டும்) தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு II–ன் கீழ் உள்ள நடைமுறைகளைப் பின்பற்றி தள்ளுபடி செய்து அரசு ஆணையிடுகிறது.

9. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.5/செயலர் (செலவினம்/வருவாய்/2009, நாள் 06–01–2010–ல், பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. ஜேக்கப்,
அரசு முதன்மை செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலர் மற்றும் வணிகரி ஆணையர், சென்னை–600005
மாநில கணக்குத் தலைவர், சென்னை–600018
மாநில கணக்குத் தலைவர் (தணிக்கை), சென்னை–600018
இந்திய தணிக்கைத் துறைத் தலைவர், புதுடில்லி–110001
நிதித்துறை, சென்னை–600009
பொது (மிக கமுக்கம்) துறை, சென்னை–600009

நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600009
அமைச்சர் (வணிகவரி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600009
இ.கோ/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.